(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | | --- |
| Miscellaneous | | --- |
| Preliminary Register | : | **CC 620/2020** |
| Deposition of Witness for | : | PW4 |
| Name | : | முத்தையா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 16.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 16 July 2026.

**எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது மலையடிபட்டி வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனக்கு தெரியும். சுமார் 7 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் காலையில் 10.00 மணிக்கு சுப்புலாபுரம் கோனார் கடை முன்பாக நானும் அசா.1, அசா.2, அ.சா.3 ஆகியோகள் டீ குடித்துக்கொண்டிருந்த போது அ.சா.1-யை எதிரி செல்லத்துரை, தங்கதுரை, செல்வராஜ் ஆகியோர் சேர்ந்து அ.சா.1-யை எதிரி செல்லதுரை பெரிய கம்பை வைத்து அ.சா.1-ன் தலையில் அடித்து காயம்

ஏற்படுத்தியதை பார்தேன். அ.சா.1–க்கு மண்டை உடைந்துவிட்டது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் அ.சா.1–க்கு ஏற்பட்ட காயத்தை இங்கு சிகிச்சை அளிக்கமுடியாது என்பதால் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யவில்லை**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.